## யாழ்ப்பாண மாநகர சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 26 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 15 யூலை 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 24 ஆகஸ்ட் 2020 ஆந் திகதியும் முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து யாழ்ப்பாண மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் ரூபா 105,400,677 இனை காணிகள், காணி சீர் திருத்தங்கள் மீதான ஆக்கப்பொருட் செலவினங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் இவை காணி கட்டடங்களின் பெறுமதிக்குள் நீதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டின் பின்னர் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது ஆதனங்களின் பெறுமதிக்குள் உள்ளடக்கப்படும். | காணி கட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ii) | கடந்த ஐந்து வருடங்களிற்கு மேல் தீர்வு செய்யாத ரூபா 5,358,866 இனை முற்பணங்களின் ஆவணங்கள் அழிவடைந்த போதும் இவை ஐந்தொகையில் சொத்தாக காட்டப்பட்டு வருகின்றமையினால் சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | 1995 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்திற்கு உரியதான என்பதனால் ஆவணங்கள் அழிவடைந்த காரணத்தினால் அவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் உள்ளது. | தீர்வு செய்யப்படாத முற்பணங்கள் தீர்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | சபையினால் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | இவ்வாறன தவறு வருங்காலத்தில் ஏற்படாது இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய சட்டத்திற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதி | | | |
| (i) | நிதி ஒழுங்கு விதி இல 371 | சபையினால் 05 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 7,047,866 பெறுமதியான முற்பணங்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 5 வருடத்திற்கு மேற்பட்ட முற்பணம் ரூபா 7,047,866 தொகையில் இடைக்கால ஓய்வூதியமாக வழங்கப்பட்ட தொகை ரூபா 3,148,042.66 ஆகும். ஓய்வூதியம் வழங்கப்படும் போது கழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்கு விதிக்கமைய முற்பணங்கள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | நிதி ஒழுங்கு விதி இல 571 | இரு வருடத்திற்கு மேற்பட்ட நானாவித வைப்புக்கள் ரூபா 3,577,446 பெறுமதி தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏனைய வைப்புக்கள் திட்டமிடல் பகுதியால் சேவைகள் கட்டணமாக அறவிடப்பட்டு வைப்பிலிடப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்கு விதிக்கமைய வைப்புக்கள் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| (i) | 2018.01.24 ஆம் திகதிய இல 05/2018 (1) ஐ கொண்ட சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய இல 05/2008 | பிரசைகள்/பயனாளிகள் சமவாயத்திற்கு ஏற்புடையதாக பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | சபையால் ஆற்றப்படும் சேவை தொடர்பாக பொதுவான சேவைப்பட்டயம் தயாரித்து காட்சிப்படுத்தப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | பணியாளார் தொடர்பாக ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. | பயிற்சிநெறிகள் நடத்துவதற்கான முன்னாயத்த வேலைத்திட்டம் நடைபெற்று கொண்டிருக்கின்றது. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் | | | |
| | 29 திசெம்பர் 2016 இன் இலக்கம் 30/2016 | சபையின் 55 வாகனங்களிற்கு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயற்படுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.2.2.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சட்டத்தின் 20 ஆம் பிரிவு மற்றும் பெறுகைகள் வழிகாட்டி 5.4.11 பிரிவுகளில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மீளாய்வாண்டில் வழங்குனர்களுக்கு ரூபா 23,656,647 பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக கொடுப்பனவு செய்யப்பட்ட போதிலும், ‘‘பெறுமதி சேர்க்கப்பட்ட வரிப்பற்றுச்சீட்டு’’ பெறப்பட்டிருக்காததுடன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கும், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர்வரி தொடர்பான விபரங்கள் (In,Out) யாவும் உரிய காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. | உரிய வரி சட்டத்திற்கு அமையவும் பெறுகைகள் வழிகாட்டிக்கமையவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 54,859,571 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 158,007,827 தொகையாக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றின்படி நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்றின்படி நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 79,980,704 | 84,852,078 | 95,599,906 | 73,735,000 | 75,047,823 | 84,952,309 |
| வாடகைகள் | 217,052,502 | 81,018,183 | 12,969,060 | 222,235,000 | 83,775,696 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 23,732,968 | 25,427,056 | 990,875 | 16,940,000 | 20,320,727 | - |
| ஏனைய வருமானம் | 810,764,099 | 623,575,220 | 21,698,360 | 787,090,000 | 693,738,951 | 247,703,448 |
| | 1,131,530,273 | 814,872,537 | 131,258,202 | 1,100,000,000 | 872,883,197 | 332,655,757 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 872,883,197 ஆக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 814,872,537 ஆக குறைவடைந்துள்ளமையால் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 58,010,660 இனால் குறைவடைந்து காணப்படுகின்றது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.2.3 வீதவரி**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 91,133,597 பெறுமதியான வீதவரிகள் வருமதியாக உள்ளது. | வீதவரி வீதம் அதிகரிப்பு காரணமாகவே K படிவத்தில் வீத மாற்றம் செய்து வழங்கவேண்டியதால் K படிவம் விநியோகிக்காமல் நிறுத்தப்பட்டது. | வீதவரி நிலுவையினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நீர் கட்டண நிலுவை ரூபா 1,228,063 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீர் கட்டண நிலுவைகள் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.2.4 வாடகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கடை வாடகை நிலுவை ரூபா 5,249,390 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2018,2019 இல் கடைகள் ஒன்றும் குத்தகைக்கு வழங்கப்படவில்லை | கடை வாடகை நிலுவைகளினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் குத்தகை நிலுவை ரூபா 7,719,668 நாளதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2019 இல் 38 இறைச்சிக்கடைகளில் 19 கடைகள் மட்டுமே குத்தகையில் வழங்கப்பட்டுள்ளது. | நிலுவைகளினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

**தொழில்சார் அனுமதிப்பத்திரங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நாளது வரையான வியாபார உரிமமும் வியாபார வரி நிலுவைகளும் ரூபா 265,500 வினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | நிலுவைகளினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 13 தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான வியாபார உரிமக் கட்டணமானது அவை அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான வியாபார உரிம அறவீடானது தொடர் நடவடிக்கையில் உள்ளது. | தொலைத்தொடர்பு கோபுரங்களிற்கான வியாபார உரிம கட்டணத்தினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,557,860 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவைத் தொகையினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிலுவையினை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

மாநகர சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய பணிகள் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபைகள் துணை விதியின் 272 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 15 விடயங்கள் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. | மாநகர சபைகள் துணை விதியின் 272 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து உப விதிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. | மாநகர சபைகள் துணை விதிக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 30 செயற்பாட்டுகளுக்குமான செயல் நடவடிக்கை நடைபெறுகின்றது. | உப விதிகளிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### (இ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தலுக்கான செயற்பாட்டிற்கு ரூபா 673,619 செலவிடப்பட்டு கட்டடம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | இதர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய அனுமதிகள் நிலையியல் குழுக்களிடமிருந்து உரிய காலத்தில் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### (ஈ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் காலநீடிப்பிற்கான காரணங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய ஆரம்பத் திகதிகளில் வேலைகளை ஆரம்பிக்கப்படாதவிடத்து ஒப்பந்தங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### (உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) மூடிய வாகனங்கள் பயன்படுத்தப்படாது திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. | குப்பை அகற்றும் வாகனங்களை மூடுவதற்கு என கயிற்றினால் பின்னப்பட்ட வலைகள் வழங்கப்பட்டுள்ளது. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு ஏற்ப வினைத்திறனாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 43 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை. | தொடர்ந்து மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) | சபையானது திண்மக்கழிவு சேகரித்தலின் போது தரம் பிரிக்கப்படாது ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. | திண்மக்கழிவுகளை தரம்பிரித்து வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திண்மக்கழிவு சேகரித்தலின் போது தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்படல் வேண்டும். |

**(ஊ) சுற்றுச்சூழல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொழிலாளர்களுக்கும் அனைத்து விதமான பாதுகாப்பு அங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் பாவனையில் உள்ள WPPB - 9029 வாகனத்திற்கு 2014 யூன் 19 திகதி விபத்து ஏற்பட்டமை தொடர்பாக தாபனவிதிக்கோவை 2 ஆவது தொகுதியின் அத்தியாயம் XLVIII(1) இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் ரூபா 1,958,200 இல் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆணையாளரின் கோரிக்கைக்கு அமைவாக மீள் விசாரனை நடைபெற்று வருகின்றது. | உரிய காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் மாநகர சபையின் முகாமைத்துவ உதவியாளரினால் ரூபா 2,934,429 வினை கையாடப்பட்டுள்ளதுடன். இத்தொகையில் ரூபா 320,000 மீளப்பெறப்பட்டது. மீதி தொகை ரூபா 2,614,429 அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மோசடிக்கு எதிராக எமது சபையினால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குதாக்கல் செய்யப்பட்டதுடன் காவல் துறையினராலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தற்போது இரு வழக்குகளும் நடைபெற்று வருகின்றது. | முகாமைத்துவ உதவியாளரினால் கையாடப்பட்டுள்ள தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | உள;@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் மாநகரசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தன. | உரிய காலத்தில் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக கட்டட அனுமதி மற்றும் வியாபார உரிமம் என்பவற்றினை பெற்றுக்கொள்வதற்கான சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தன. | தேவையான சகல ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் பட்டயத்தில் குறிக்கப்பட்ட காலத்திற்குள் சேவைகள் வழங்கப்படும். | மாநகர சபையானது பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ளதற்கு அமைவாக சேவைகள் வழங்கப்படல் வேண்டும். |
| (உ) | சபையினால் சில்லறை கடன் வழங்குனரிற்கு கொடுத்து தீர்க்கப்பட வேண்டிய 2 தொடக்கம் 5 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 32,656,352 கொடுப்பனவுகள் கொடுத்து தீர்க்கப்படாமலுள்ளது. | ரூபா 7,189,626 இற்கான வேலை முடிவடைந்துள்ளது, கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 11,214,446 இற்கான மீன் சந்தை வேலை நடைபெற்று கொண்டிருக்கின்றது. | சபையினால் சில்லறை கடன் வழங்குனரிற்குரிய தொகை தீர்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | சபைக்கு சொந்தமான 213 கடைகளிற்கு தனிப்பட்டவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்டு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன். குத்தகை ஒப்பந்தத்தின் இல 14, 23 இல் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக குத்தகை பெறப்பட்டவரினால் வேறு நபருக்கு கடை வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் குத்தகை கால முடிவில் மீண்டும் கேள்வி கோரப்படாது குத்தகை ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டிருந்தன. இது குத்தகை வருமான சேகரிப்பின் வினைத்திறன் இன்மையை காட்டுகின்றது. | ஆளுநர் கோரியதற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சபைக்கு சொந்தமான 213 கடைகள் மீண்டும் கேள்வி கோரப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| (எ) | பொதுநிதி ஒதுக்கம் மற்றும் பொது நூலக நிதி ஒதுக்கம் முறையே ரூபா 112,352,309, ரூபா 135,449,588 எவ்வித நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படவில்லை. | தற்போதய சபையின் வருமானத்தை பயன்படுத்தி அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து வருகின்றோம் | சபையினது பொதுநிதி ஒதுக்கம் மற்றும் பொது நூலக நிதி ஒதுக்கீட்டினை உரிய தேவைக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஏ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீடு ரூபா 18,076,609 ஆனது இற்றை வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் ஒதுக்கீடாகக் காணப்படுகிறது. | இந்நிதி மாநகரசபையின் அபிவிருத்திக்கு அதிகாரசபையின் அனுமதியுடன் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். | சபையானது நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதி ஒதுக்கீடு உரிய தேவைக்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சபைக்குச் சொந்தமான 51 காணி கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விலை மதிப்பீட்டின் பின்னர் 2020 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | சபைக்குச் சொந்தமான 51 காணி கட்டிடங்களினை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 248 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளது. | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | மாநகர சபையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் இருந்து அனுமதி பெற்றுக்கொள்ளப்படாமல் 18 சுகாதார தொழிலாளிகளிற்கும் மற்றும் தொழிலாளர்களிற்குமான நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | கோரிக்கை தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உரிய அனுமதிபெறப்பட்டு நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | மின்னியலாளர் நியமனம் - 2013 தொடர்பாக கல்வித் தகைமையற்ற 03 மின்னியலாளர்களின் நியமனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் 04 தொழில் தகைமை இல்லாத மின்னியலாளர் நியமனத்திற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதம செயலாளர், வடக்கு உள்@ராட்சி ஆணையாளர் தலைமையிலான குழு உருவாக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தொழில் தகைமை இல்லாத மின்னியலாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 51 ஓய்வூதியர்களிடமிருந்து 05 வருடத்திற்கு மேலாக ரூபா 372,879 பெறுமதியான கடன்கள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் முற்பணக்கணக்கு மீதியினை அறவிட சபை நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் உள்ள 10 வாகனங்கள் நீண்ட காலமாக பழுதடைந்தும் திருத்தப்படாத நிலையில் வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது. | தற்போது இவ்வாகனங்களில் 6 உழவு இயந்திரம் இயங்கு நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. | 10 வாகனங்கள் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 31 வாகனங்கள் பயன்பாடற்ற நிலையில் கடந்த 04 வருடங்களாக வாகன தரிப்பிடத்தில் காணப்படுகின்றது. | சபையின் பெயரிற்கு உடமை மாற்றம் செய்த பிற்பாடே பகிரங்க ஏலவிற்பனை செய்ய முடியும். | 31 வாகனங்கள் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4.2 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலுள்ள சபைக்குரித்தற்ற 34 வாகனங்களின் உரிமை மாற்றதினை மேற்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றத்திற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 34 வாகனங்களின் உரிமை மாற்றம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 02-175/2014 ஆம் இலக்க 2014 திசெம்பர் 19 ஆம் திகதிய சுற்றுநிரூபத்திற்கு முரணாக மாநகர சபையினால் ரூபா 36,000 இனை சீருடைக்கான கொடுப்பனவாக ஆயுர்வேத சித்த வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டு கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றேன். | மாநகர சபையினால் ஆயுர்வேத சித்த வைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சீருடைக்கான கொடுப்பனவினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | யாழ்ப்பாணம் மாநகர சபையானது அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 05/2013 மற்றும் தாபனவிதிக்கோவை அத்தியாயம் XXI இன்படி ரூபா 1,941,300 இனை சீருடைக் கொடுப்பனவானது சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் ஊழியர்களினால் கடமை நேரத்தின் போது சீருடை அணிந்து கடமையாற்றப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க சுற்றறிக்கை 05/2013 பிரகாரம் 02 சோடி சீருடைக்கான ரூபா 4000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. | சுகாதாரத் தொழிலாளர்கள் சீருடை அணிவது தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் ஒப்பந்த வேலை, சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி பெறுகைத் திட்டம் 2021 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் பெறுகைதிட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.6.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 இன் 3.4.2 இல் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்காது. மாநகர சபையானது மீளாய்வாண்டில் ரூபா 4,524,614 இனை களஞ்சியப் பொருட்களினை வாங்கல் முறையிலான பெறுகை நடைமுறையினை பின்பற்றி கொள்வனவு செய்திருந்தது. | பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 பிரிவு 3.4.2. இல் குறிப்பிட்டதற்கமைவாக கூறு விலைகளுக்கான வேண்டுகோள்கள், வழங்குநர்கள் இடாப்பிலடங்கியுள்ள தனியாட்கள்/ குழுமங்களுக்கே முகவரியிடப்படுகின்றன. | மாநகர சபையானது பெறுகை வழிகாட்டி நெறிகள் 2006 இன் 3.4.2 இல் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | மாநகர சபையானது வருடாந்தம் வழங்குனரை பதிவு செய்யும் போது பெறுகை வழிகாட்டி நெறியின் இலக்கம் 3.4.3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு வழங்குனர் பதிவானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படும் | மாநகர சபையானது வருடாந்தம் வழங்குனரை பதிவு செய்யும் போது பெறுகை வழிகாட்டி நெறியின் இலக்கம் 3.4.3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களை பின்பற்றப்படல் வேண்டும். |

### 3.6.3 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாநகர சபையானது மீன் சந்தை அமைப்பதற்காக 2017 நவம்பர் 13 ஆம் திகதி ரூபா 19,352,640 ஒப்பந்தம் மேற்கொண்டிருந்த வேலை நிறைவு செய்யாத காரணத்தினால் குறித்த ஒப்பந்தகாரருடனான ஒப்பந்தமானது 2019 பெப்ரவரி 02 திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தது. | இறுதி எச்சரிக்கையை அவருக்கு சமர்ப்பித்து குறித்த நிதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | மீன் சந்தை அமைத்தல் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் பாதீட்டின் செலவுகளுக்கும் உண்மையான செலவுகளுக்கும் கணிசத்தன்மையான வேறுபாடு காணப்படுவதனால் இது ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டுகிறது. | விலகல்களினை கருத்திற்கொண்டு பாதீடு தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பாதீட்டினை சரியான முறையில் தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்களும் பதிலளிக்கப்படாத ஐயவினாக்களும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட மிருக வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர் தொடர்பாக வழங்கப்பட்ட சம்பளம் சட்டத்திற்கு முரணான கொடுப்பனவாகவிருப்பதனால் கணக்காய்வில் அனுமதிக்க முடியாதுள்ளது. | மாகண பொதுக்கணக் குழுவின் (COPA) ஆலோசனையின் பிரகாரம் விசாரணை குழு அமைக்கப்பட்டு இக் குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டன. | தீர்வு செய்யப்படாத ஐயவினாக்கள் தீர்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 2015 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட பொறியியலாளர் நியமனத்திற்கான அனுமதியளிக்கப்படாத சம்பளமும், போக்குவரத்து செலவினமும் ரூபா 750,791 தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு சட்டத்திற்கு முரணான கொடுப்பனவாகவிருப்பதனால் கணக்காய்வில் அனுமதிக்க முடியாதுள்ளது. | மாகண பொதுக்கணக்காய்வு குழுவின் (COPA)ஆலோசனையின் பிரகாரம் இக் குழுவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டன அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்வு செய்யப்படாத ஐயவினாக்கள் தீர்வு செய்யப்படல் வேண்டும். |
| (இ) அனுமதியளிக்கப்படாத விடுமுறையிலிருந்த அலுவலரிடம் இருந்து ரூபா 202,792 பெறுமதியான சம்பளக் கொடுப்பனவினை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்த போதும் இது வரை குறித்த கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை. | மாநகர சபையின் ஆணையாளரனால் E/PF/CE/1482 இலக்க 15.10.2019 திகதிய கடிதம் மூலம் குறித்த தொகையினை அறவிடுவதற்கு 2வது நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | தீர்வு செய்யப்படாத ஐயவினாக்கள் தீர்வு செய்யப்படல் வேண்டும். |